2016 ஆகஸ்ட் 5]

அலுவலகத்தைக் கொண்டு சென்ற தலைவி, நம்முடைய புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 'மக்களைத் தேடி அரசு' என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

பேருந்து வசதி

***1417—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டைக்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய கேள்வியில், புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டைக்கு புதிய பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். அந்த வழியிலே 4 அரசு நகரப் பேருந்துகள் மூலமாக 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வகோட்டை வழியாக தஞ்சாவூருக்கு 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இருந்தபோதிலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு புதிய பேருந்துகள் இயக்குவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே மண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா, 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து ஆட்சியைப் பிடித்து வரலாற்றுச் சாதனை புரிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 6 ஆவது முறையாக அரியணையில் அமர்ந்த, ஏழைகளின் இதயத் துடிப்பே, அம்மா, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்பும், மரபும், பெருமையும், சிறப்பும் மிக்க இந்த மாபெரும் சபையில் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன். என்னை கந்தர்வகோட்டை வேட்பாளராக்கி, சட்டமன்ற உறுப்பினராக்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதியில் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைச் சொல்லி, கந்தர்வகோட்டையிலிருந்து ஒரத்தநாடு வரை அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த வழித்தடங்களிலே பயணிகளுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு, பேருந்துகளை இயக்கி சாதனை படைத்து வரக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் பகுதியிலே பேருந்து தேவைப்படுமாயின், அதை இயக்குவதற்கு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், நன்றி.*

2016 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் உற்பத்தித் திட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயராமகிருஷ்ணன், பேசுங்கள்.*

முற்பகல் 11-10

*__திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டம் வழங்குவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*